பாடம் 6

# வேலைத் திறமையுள்ள சிறுவன்

***மிகவும் சிறப்பாகவும், புதிதான விதத்திலும் நீ செயல்பட்டதுண்டா? நீ செய்த செயலின் மூலம் பிறரும் பயன் பெற்றிருந்தால் உனக்கு எத்தனை மகிழ்ச்சியாயிருக்கும். மிகமிகச்சிறப் பாகச் செயல்பட்ட ஒரு சிறுவனைப் பற்றிப் பார்ப்போமா?***

தனது தச்சுப்பட்டறையில் யோசேப்பு கவனமாக மர வேலைகள் செய்துகொண்டிருந் தார். அப்போது பளபளவெனத் தேய்க்கப்பட்ட மரக்கட்டைகளி லிருந்து எழும்பிய மணம் காற் றில் கலந்து நல்ல வாசனையை வீசியது. வேலையைச் செய்த போது எழும்பிய மரத்துகற்கள், ஜன்னல் வழியே வந்த ஒளிக் கற்றையில் அங்குமிங்கும் அசைவது அழகிய நடனம் போன்றிருந்தது.



தன்னுடன் இயேசு வேலை செய்வதைக் கண்டபோது யோசேப்புக்கு மிகவும் சந்தோ ஷமாக இருந்தது. இயேசு சிறு வனாக இருப்பினும் மிகவும் நேர்த்தியாக அருமையாக வேலைசெய்தார். மிகவும் திறமை வாய்ந்த தச்சன் போன்று செயல்பட்டார்.

தான் செய்துகொண்டிருந்த வேலையை யோசேப்பு கவனிப் பதை இயேசு பார்த்தார். தனது வேலை மிகவும் சிறப்பாக இருந்ததை யோசேப்பின் முகமலர்ச்சி காட்டியது; இயேசு அதைக் கவனித்தார். தனது வேலை மிகவும் நேர்த்தியாக இருந்ததால் அது அவருக்கு சந்தோஷம் தந்தது.

அப்பா "என்னால் முடிந்த வரை நன்றாகச் செய்துள்ளேன்" என்று இயேசு கூறியபோது "ஆம் மகனே நம்மால் முடிந்த அளவு நாம் சிறப்பாகச் செய்யும்போது, தேவன் நம்மை யும் தமக்கென்று பயன்படுத்து வார்" எனக்கூறி இயேசுவை அன்புடன் கட்டிப்பிடித்துக் கொண்டார் யோசேப்பு.

ஆனால் இயேசு அதற்குப்

## மனன வசனம்

**செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்.**

**பிரசங்கி 9:10.**

பதில் ஒன்றும் கூறவில்லை. பஸ்கா பண்டிகையின்போது நிகழ்ந்த நிகழ்வுகளை நினைத்துப்பார்த்தார். தானே ஒருநாள் பஸ்கா ஆட்டுக்குட்டியாகப் பலியாகப் போவதை நினைத்துப் பார்த்தார். இப்போதும்கூட பெற்றோருக்கு உதவுவதின் மூலமும், மிகவும் அருமையாக மேசை, நாற்காலிகள் போன்ற மரச்சாமன்களைச் சிறப்பாகச் செய்வதின்மூலமும் பிதாவாகிய தேவனுக்குச் சேவை செய்துகொண்டிருந்தார்.

நேர்த்தியாக இயேசு செய்த மரச்சாமான்கள் பலருக்கு பயனுள்ளதாக இருந்தன.

"எல்லாவற்றையும் நீ கற்றுக்கொள்; அதன்மூலம் தேவன் தமது திட்டத்தை உனக்குக் காட்டுவார்; அப்போது உலகத்திற்கு உன்னால் சேவைசெய்ய முடியும்" என்று இயேசுவிடம் யோசேப்பு அடிக்கடிச் செல்லுவதுண்டு.

தன் தந்தை யோசேப்புக்கு உதவியாக வேலைசெய்யும் போது இயேசுவை மற்றச் சிறுவர்கள் விளையாட அழைப்பதுண்டு. யோசேப்பு பதில் சொல்லும் முன்னரே, "நான் இன்னும் சில வேலைகளை முடிக்க வேண்டியுள்ளது; இப்போது விளையாட வரமுடியாது. மன்னியுங்கள்" என்று மற்ற பிள்ளைகள் மனம் வருந்தாதபடி சொல்வார் இயேசு.

இயேசுவின் அருமையான பதிலாலும், பொறுப்பு உணர்வாலும் யோசேப்பு மிகவும் மகிழ்வார்.

யோசேப்பு அந்தச் சிறுவர்களிடம், "நாங்கள் வேலையை விரைவாக முடித்துவிட்டு, வீட்டிற்குப் போகவேண்டியிருக்கிறது. வருந்தாதீர்கள்" என்று புன்முறுவலோடு சொல்வார்.

தன் தந்தையிடமிருந்து



# செய்தி

**நான் சிறப்பாகச் செய்யும்போது,**

**தேவனுக்குச் சேவைசெய்கிறேன்.**

இயேசு அநேக வேலைகளையும் விஷயங்களையும் கற்றுக்கொண்டார்; அது அவரை மகிழச்செய்தன. மரியாளின் காலடியில் உட்கார்ந்து வேதாகம விஷயங்களையும், மற்ற விஷயங்களையும் கவனமாகக் கேட்பார். இயற்கை, விலங்குகள் போன்றவைகளிலிருந்தும் நிறைய கற்றுக்கொண்டார். இயேசுவின் அம்மா மரியாள் தான் இயேசுவின் முதல் ஆசிரியை. வேதத்தின் எழுத்துக்களை அழகாக வாசிக்கவும் எழுதவும் அம்மாவிடமிருந்து கற்றுக்கொண்டார். அவர் ஞானத்தைக் கண்டு மக்கள் ஆச்சரியப்பட்டார்கள். யோவான் 7:15. தன் பெற்றோருடன் சேர்ந்து தம் பிதாவிடம் ஜெபித்தார். கண்மணியே! இயேசு போலவே நீயும் சிறப்பாகச் செயல்படு.

**செய்முறை:** *இயேசு தன் தந்தைக்கு உதவியாக மரத்தினால் அநேக பொருட்களைச் செய்தார். கீழேயுள்ள படங்களைப் பார். எத்தகைய பொருட்களை அவர் செய்திருப்பார்? அப்பொருட்களுக்கு அழகாக வண்ணமிடு.*

**பதில் 6**

